பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.
Chundikuli Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 29 ஷ்பா 20 இதழ் 90
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-5-1985

# வல்வை சம்பவம்: நீதிவிசாரணைக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவித - பலாத்கார சம்பவங்கள் குறித்து, உடனடியான நீதியான விசாரணை நடத்தவேண்டும் என்றும், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெருமல் தடுக்க நட—வடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரி வல்வை பிரஜைகள் குழு, ஜனதிபதிக்கு விரிவான மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''கடந்த 8-ம் திகதி பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை நெடியகாடு தொடக்கம் ஊரிக்காடுவரை

(6ம் பக்கம் பார்க்க)

# மன்னர்பொலிஸ்நிலையத் தாக்குதல்: பெரும்சேதம்!

## "யாழ்தேவி' இன்று யாழ்ப்பாணம் வருகிறது

[கொழும்பு]

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரை இன்று 'யாழ்தேவி' புகையிரத சேவை மீண்டும் ஆரம்பமாகும் என்று ரயில் கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

கோட்டையிலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்படும் 'யாழ்தேவி' பிற்பகல் 1-40

(5ம் பக்கம் பார்க்க)

## இடிபாடுகளில் பொலிஸார் சிக்கிக்கொண்டதாக அரசு அறிக்கை தகவல்

(மன்னர்)

மன்னர் பொலிஸ் நிலையம் நேற்று அதிகாலை தீவிரவாதிகளின் பெரும் தாக்குதலுக்குள்ளானதில் பொலிஸ் நிலைய பிரதான கட்டிடம்உட்பட பொலிஸ் நிலையத்தின் சகல அலுவலகக் கட்டிடங்களும் விடுதிகளும் தரைமட்டமாகின!

தாக்குதலின் போது பலர் இறந்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் பொலிஸ் நிலையக் கட்டிட இடிபாடுகளுக்குள் பல பொலிசார் சிக்கியிருக்கலாம் என்று நேற்றிரவு அரசாங்கம் விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கப்பெற்ற அரச தகவலின்படி; இரண்டுபொலிசார் பலியானதாகவும் பலர், கட்டிட இடிபாடுகளுக்குள் அகப்பட்டுக் கொண்டதாகவும்

(6ம் பக்கம் பார்க்க)

## "சமரசப் பேச்சுக்கான சாத்தியம்எதுவுமில்லை!" தமிழகத்தில் 'சிவா'

[சென்னை]

''இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இனிமேல் நடத்தப்படும் மகாநாட்டில் தமிழ்த் தீவிரவாதிகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்ற அனுமதிக்கவேண்டும்'' என்று இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் கூறியுள்ளார்.

பி. டி ஐ நிருபர் கிருஷன் ஆனந்த் கைது செய்யப்பட்டிருப்பதுகுறித்து கருத்து வெளி

(6ம் பக்கம் பார்க்க)

## பி. டி. ஐ. நிருபர் கிருஷன் ஆனந்துக்கு ரூ. 4 லட்சம் பிணை! 24ந் திகதி விசாரணை ஆரம்பம்

[கொழும்பு]

பி. டி. ஐ செய்தி நிருபர் திரு. கிருஷன் ஆனந்த் நான்கு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் இந்திய ஸ்தானிகராலயம் இவரது பிணைக்குப் பொறுப்பு நின்றது.

திரு. கிருஷன் ஆனந்த் கோட்டை மாஜிஸ்திரேட் ஜனுப் எஸ் ஐ. இமாம்முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோதே பிணையில் விடப்பட்டார்.

நீதிமன்றின் அனுமதியில்

6 ம் பக்கம் பார்க்க

## உபஜனதிபதி மத்திய அரசின் அறிக்கையைக் கோருகிறர்!

சென்னை, மே. 10

பி. டி ஐ. நிருபர் திரு. கிருஷன் ஆனந்த்கைதுசெய்யப்பட்டிருப்பது குறித்து தமிழகத்திலும் புதுடில்லியிலும் பலத்த ஆட்சேபம் தெரிவிககப்பட்டுள்ளது.

லோக்சபா, ராஜ்யசபாவிலும் இதுகுறித்து உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ராஜ்ய சபைத் தலைவரும், இந்திய உபஜனதிபதியுமான

(6-ம்பக்கம் பார்க்க)

## "இந்தியாவை போருக்கு அறைகூவும் பேச்சினல் எதுவித பயனுமில்லை!" சபையில் 'சரத்' எச்சரிக்கை

[ஸ்ரீஜயவர்த்தனபுர]

''இந்தயாவைப் போருக்கு அறைகூவும் உரையினல் எவ்வித பயனுமில்லை. இதனல் வளர்ந்துவரும் இருநாடுகளின் உறவிலுமே பாதிப்பு ஏற்படும்.'' என்று கலவானத் தொகுதி எம். பி. சரத் முத்தெட்டுவேகம எச்சரித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனுப் குர்ஷித் ஆலம்கானின் உரை தொடர்பாக விவாதம் இடம்பெற்றது. அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

திரு. சரத்முத்தெட்டுவேகம தொடர்ந்து கூறியதாவது:- ''இலங்கையில் உள்ள பி. டி ஐ நிருபரின் நடவடிக்கை ஒரு 'கிரிமினல்' குற்றமில்லை. அவர் சர்ச்சைக்குரிய கருத்தைவெளியிட்டு 26 நாட்களின் பின்னரே

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் கடையடைப்பு மக்கள் நடமாட்டம் குறைவு!

[யாழ்ப்பாணம்]

வர்த்தகர்கள் கடத்தப்படுவதை வன்மையாகக் கண்டித்தும், கடத்தப்பட்ட யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். வி. முருகேசுவை எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், யாழ். நகரில் நேற்று கடையடைப்பு நடைபெற்றது.

யாழ். வர்த்தகர் சங்கத்தினர் கடைகளைப் பூட்டி பூரணபகிஷ்

(5ம் பக்கம் பார்க்க)

## "ஆஸ்திரேலியாவையும் பகைக்கவேண்டாம்"

[ஸ்ரீஜயவர்த்தனபுர]

''இநதியாவைப் பகைத்துக் கொண்டதுபோல் ஆஸ்திரேலியாவையும் பகைக்கக்கூடாது. இதனல் இலங்கைக்கு இரட்டிப்புப் பாதிப்பு ஏற்படும்.'' என்று திரு சரத் முத்தெட்டுவேகம எச்சரித்துள்ளார்

நேற்றுப் பாராளுமன்றில்

(5ம் பக்கம் பார்க்க)

## மாடும் மனிதனும்

[யாழ்ப்பாணம்]

விறகு வெட்டிச் சீவியம் நடாத்தும் வயோதிபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்!

நேற்றுக்காலை திக்கம் என்னும் இடத்தில் விறகு விற்றுவிட்டு மாட்டு வண்டியில் தமது சொந்த ஊரான கரவெட்டிக்குத் திருப்பிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடுபட்டு நிலத்தில் வீழ்ந்து மரணமானராம்.

[6-ம் பக்கம் பார்க்க]

## முன்னள் கிழக்கு மாகாண பொலிஸ் பொறுப்பதிகாரி மீது விசாரணை! சப்-இன்ஸ்பெக்டர் தலைமறைவு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தின் பொலிஸ் நிலையமொன்றின் முன்னள் பொறுப்பதிகாரி ஒருவர் இரகசிய பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்விசாரணையில் சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பொலிஸ்மாஅதி

[6ம் பக்கம் பார்க்க]

## உருக்கமான வேண்டுகோள்!

சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு தயவான கோரிக்கை:

எனது கணவரையும் (எஸ். வி முருகேசு) அப்பாவையும் எப்படி அழைத்துச் சென்றீர்களோ அதே மாதிரி மிக விரைவில் திருப்பிக் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு மிகவும் தயவாக வேண்டிக்கொள்கின்றேம்.

இங்ஙனம்

மனைவி, மக்கள்.

3227

# விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு வயது பெண் அல்சஷன் நாய் மற்றும் சில்லறை குசினி தளபாடங்கள்விற்பனைக்குண்டு தொடர்பு 187, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலை பேசி இல: 22029 (3184)

திருநெல்வேலி தெற்கில் மூன்று பரப்பு சதுரக் காணி சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு; செல்லக்கண்டு, திருநெல்வேலி தெற்கு. 3208

புதியவீடு 3 படுக்கை அறைகள் குசினி, சாலை, குளி அறை தற்காலிக வசதிகளுடன் 1 பரப்பு 14 குளிகள் சுற்றிவர மதில் 435, கஸ்தூரியார்வீதி, கில்னர் ஒழுங்கை தொலை பேசி: 22029, 187, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 3194

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட முளைத்திறன் கூடிய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. விலைமலிவு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 107, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 3191

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு,வெந்தயம் ஆகியநான்கு சேர்வையிலுள்ள சீயாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்புகொள்க. M. G. M and Stores, 777, காங்கேசன்துறை வீதி and 208 முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

நல்ல நிலையிலுள்ள 3 Sri 5142 Dauphine Renault Car உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:திருமதி K. Ramanathan உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். 3190

கொண்டா எக்ஸ்பிரஸ் N C 50 விற்பனைக்குண்டு விரும்பின் புதிய ரலிசைக்கிலுக்கு மாற்றிக்கொடுக்கப்படும்.தொடர்பு: P நவரட்ணம், பிரதான வீதி, வடலியடைப்பு. 3202

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு வடக்குப் பக்கமாக தண்ணீர் வசதியுடன் 10 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: சு. முத்துலிங்கம், 56, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3102

## விற்பனைக்கு

நல்ல இன அல்செசன் நாய்க்குட்டி பெண் 3 மாதம் கூட்டுடன் விற்பனைக்குண்டு. 52 (32) அரசடி றோட், யாழ்ப்பாணம். 3151

தொலைக்காட்சிப்பெட்டி கலர், 20 அங்குலம். பேபி பிலிங்குக்கர், கென்வூட் Mixer அத்துடன் வேறு மின்சார சாதனங்களும் விற்பனைக்கு உண்டு. பொன்னுத்துரை, நில அளவையாளர், சிவன் வீதி, உரும்பராய். 3204

கண்டிவீதிக்குச் சமீபமாக மட்டுவில் தெற்கு முருகமூர்த்தி கோவிலுக்குப் பின்புறம் சரவணப்பொய்கை இல்லத்திற்கு வடமேற்குப்புறமாக உள்ளதும், இரண்டு பக்கம் தெருவும், மின்வசதியுமுள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு: T சுந்தரமூர்த்தி ஐயர், ஓய்வுபெற்ற ஆசிரியர், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. 3185

## தேவை

யாழ். நகர எல்லைக்குள் மினி சினிமா தியேட்டர் ஆரம்பிப்பதற்கு (சுமார் 100பேர்) பார்க்கக் கூடிய விஸ்தீரணமுள்ள கட்டிடம் தேவை. தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 3199. C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3199

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டையூடாக நவாலி யாழ்ப்பாண வீதியில் உறுதிகள் உள்ளடக்கிய பார்சல் ஒன்று 9ம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நவாலி மகாவித்தியாலத்தின் முன்பாக வசிக்கும் திருமதி தங்கராஜா என்பவரிடம் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3213

## குத்தகைக்கு

குப்பிழான் (M. P. C. S. அருகாமை) மல்லாகம் பிரதான வீதியில் குப்பிழானில் மின்சார வசதிகளுடன் பழைய மில்க்கட்டிடம் குத்தகைக்கு உண்டு கோட்டா பெற்றுத் தரப்படும். தொடர்புகொள்க; (1) செல்வம் அரிசி ஆலை, ஊரங்குணை, ஏழாலை, (2) இ கந்தையா, R. M. P. கேணியடி, குப்பிழான், ஏழாலை. 3215

# தொழிற் பயிற்சி

வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பின்வரும் பயிற்சிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. Computer BASIC
   6 மாதம்
   ரூபாய் 1250/- தவணை முறையில்
2. இயந்திர இயல்
   6 மாதம்
3. சுருக்கெழுத்து ஆங்கிலம்
   6 மாதம்
4. தட்டெழுத்து ஆங்கிலம்
   6 மாதம்
5. வெல்டிங்
   6 மாதம்
6. கட்டிட படவரைதல்
   6 மாதம்

மாதக் கட்டணம் ரூபா 30/-

இப்பொழுது நடைபெறும் வகுப்புகளும் தொடர்ந்து 15-5-85 முதல் நடைபெறும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

இயக்குனர்,
வட்டு. தொண்டேயம்
தொழிற் பயிற்சி நிலையம்,
சித்தன்கேணி. (3207)

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைச்சாமி முத்தையா என்பவரின் மரணசாதன மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல: றி/234

துரைச்சாமி முத்தையா
கைம்பெண் நாகம்மா,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை:
— மனுதாரர்

எதிராக

முத்தையா திருச்செல்வம்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை,
- எதிர் மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரண மெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 28ந் திகதி

கோட்டுக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

தயாரித்தவர்:
க. குணரத்தினம்,
மனுதாரரின் சட்டத்தரணி,
3200

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இல. T 3828

காலஞ்சென்ற மரணசாதனமின்றி இறந்த வட்டுக்கோட்டை சரவணமுத்து மகோற்கடன் மரணச்சொத்துக்கள் விடயமாக

— இறந்தவர்

(1) துரையப்பா பாக்கியநாதன், பெண்
(2) மீனும்பிகை பாக்கியநாதன், மூளாய் றோட்டு, வட்டுக்கோட்டை.

— மனுதாரர்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதெனஇத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானகட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

எம். கே. சுப்பிரமணியம்,
மனுதாரர் தரணி.

3197




## புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கோணவளை வைரவர் கோவில் புனருத்தாரணவேலைகள் ஆரம்பமாகியுள்ளன நயினை பரமேஸ்வரக் குருக்கள் பாலஸ்தாபனத்தை நடத்திவைத்தார்.

## HOME FINANCE LTD

## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக

**சீத்தை – பப்ளின் – பிசாமா**

போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.

NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

## கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி வகுப்புகள்

செரம்பூர் சர்வகலாசாலை B Th (Bachelor of Theology B D (Bachelor of Divinity) வகுப்புகளுக்கான விரிவுரைகள்

1986 ஆனி மாதம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும்.

பெப்ரவரி 1986 இல் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்குரிய விசேட வகுப்புகள் 1985 ஆனி 1-ம் திகதி ஆரம்பமாகும்.

## குறுகியகால கிறிஸ்தவ இறையியல் பயிற்சி வகுப்புகள்

1985 ஆனி 1-ம் திகதி ஆரம்பமாகும்.

மேற்படி பயிற்சி நெறிகளில் அனுமதிக்கப்படுவோருக்கு உதவிப்பணம் (SCHOLARSHIPS) கொடுக்கப்படும்

திருப்திகரமாக பயிற்சி வகுப்புக்களை முடித்து வெளியேறுவோருக்கு தென இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தில் முழுநேர ஊழியர்களாக பங்குபெற வாய்ப்புண்டு.

முழு விபரங்களுக்கும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

பதிவாளர்,
பொது நிலையாளர் – நற்தூதுப்பணி
பயிற்சி நிலையம்,
மே'பா, கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்,
மருதனமடம், சுன்னாகம். 3176

## கற்குழியில் இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு சுண்ணாம்புக் கல் ஏற்றி இறக்குதல்

கீரிமலைக்கருகாமையில் அமைந்துள்ள எமது கற்குழியில் இருந்து (Quarry) தொழிற்சாலையில் உள்ள கல் நொருக்கி இயந்திரத்திற்கு (Crusher) சுண்ணாம்பு கற்களை ஏற்றி இறக்குவதற்கான ''ரிப்பர் லொறிகள்'' தேவைப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தமது ''ரிப்பர் லொறிகளை'' சேவையில் ஈடுபடுத்தவிரும்பும் 'ரிப்பர் லொறிச்'' சொந்தக்காரர்களை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் கீழ் வரவேற்கின்றோம்.

(1) ஒருதொன் ஏற்றி இறக்குவதற்கான நியமிக்கப்பட்ட கூலி ரூபா 10/- மட்டும்.
(2) ''ரிப்பர்''களுக்கான எரிபொருள், உராய்வு நீக்கிகள் மற்றும் சாரதிக்கான சம்பளம் என்பன ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட வேண்டும்.
(3) கற்கள் எமது கனரக இயந்திரங்களால் ரிப்பர்களுக்கு ஏற்றி விடப்படும்
(4) ஆகக் கூடுதலான ஓட்டத்தூரம் 1½ கிலோ மீட்டர்.

மேற்படி நிபந்தனைகட்கு அமைய சேவையாற்ற விரும்பும் ஒப்பந்தகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக உதவிப் பொது முகாமையாளர் அவர்களின் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.
3214

### மணிவாக்கு

அதிகம் சொல்ல விரும்புபவன் குறைவான வார்த்தைகளையே பயன் படுத்துவான்.

— எச். டபிள்யூ. ஷா.

## நமது நோக்கு

# நிருபர்கள் நடுக்கம்

சண்டை தொடங்கினால் சத்தியமே முதலில் பலியாகின்றதென்றொரு வாக்கியம் ஆங்கிலத்தில் உண்டு.

வடபகுதியில் அப்பாவி மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டது உண்மையாயினும் அதனை மிகைப்படுத்தி அரசின் பாதுகாப்புப் படையினரே இக் கொடுமையை நிகழ்த்தியவரென்று சொல்லும் உரிமை இன்று பத்திரிகைகளுக்கு இல்லை. தணிக்கையின் விளைவு இது. செயற்பாட்டு விளையில் செய்திகள் தயாரிக்கப்படுகின்றன.

உண்மையான செய்திக்கே அரசின் அனுமதி பெற வேண்டுமானால் செய்தியை திரிக்கும் உரிமை நிருபர்களுக்கோ வேறெந்த பத்திரிகையாளருக்கோ இல்லை என்பது தெளிவு.

பழித்தலும், நீட்டலும் வேண்டா உலகம் பழிக்கும் செயல்களை கைவிடுவோமானால் என்று வள்ளுவர் கூறியது பத்திரிகையாளருக்கும் மிகப்பொருத்தமானகருத்து

தூணைத் துரும்பாக்குவது பழித்தல்; துரும்பைத் தூணாக்குவது நீட்டல்; சாதாரண காலத்தில் இவ்வித திருவிளையாடல்களில் பத்திரிகையாளர் ஈடுபட்டால் பரவாயில்லை. செய்திகளைச் சுவையின்றி வழங்குதல் சமையற்கலை தெரியாத நிருபரின் செயல் என்று கருதப்படுகின்றது.

உண்மையில் அத்திபாரமிட்டு அழகான கட்டிடம் அமைத்தால் வீடு எந்த (அரசியல்) புயலுக்கும் நின்றுபிடிக்கும்.

அதுவும் காலமறிந்து வாசகர் மனோநிலை அறிந்து உணவால் ஏற்படக்கூடிய சிக்கலைத் தவிர்த்து நடப்பதும் பத்திரிகைப் பணியின் முக்கிய கொள்கை.

"Facts are sacred but comment is free" என்பது உலகப் புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஸ்கொட் (Scott) வழங்கிய மணிவாசகம்.

செய்தி புனிதமானது; தெய்வீகத்தன்மையது; "சத்தியம் தெய்வம் என்றால் அதனை நாஸ்திகர்களே ஏற்றுக்கொள்வாரென்பதால் 'தெய்வம் சத்தியம்' என்பதை இவ்வாறு மாற்றினேன்" என்கிறார் உலகம் கண்ட பத்திரிகையாளர்களில் முன்னணி வகிக்கும் மகாத்மாகாந்தி.

லண்டனில் இந்தியா ஹவுசிலும், கொழும்பில் (வெள்ளவத்தை) மைசூர் கபேயிலும் மகாத்மாவின் வாரவெளியீடாகிய ஹரிஜனை வாங்குவதற்கு காத்திருந்தோர் ஆயிரம் ஆயிரம்.

எனவே நிருபரின் பொறுப்பும், அத்தசமயம் அவர்களின் சிறப்பும் கயிற்றில் நடக்கும் சாதனை போன்றது.

சாதாரண அரசியல் பேச்சை சாதாரண காலத்தில் நிருபர் ஒருவர் திரித்துவிட்டால் அது ஒரு மானநட்ட வழக்குக்கு இடமளிக்கலாம். 'சண்டை'ச் சூழ்நிலையில் ஒரு நாட்டைப் பாதிக்குமளவில் அதுவும் நாட்டின் ஜனாதிபதியின் பேச்சென்றால் அது திரிக்கப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பியது உண்மையானால் அது பிரமாதமான குற்றம் என்பதை நிருபருக்கு மட்டுமல்ல வேறெவருக்கும் நிரூபிக்கத் தேவையில்லை.

இலங்கை ஜனாதிபதி நிகழ்த்திய பேச்சை இலங்கையிலுள்ள பி. டி. ஐ. செய்தி நிறுவன நிருபர் கிஷ்ணன் ஆனந்த் திரித்து வெளியிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

திருமதி தாட்சருக்கு ஜனாதிபதி அளித்த பெருவிருந்தில் அங்கு நிகழ்த்திய உரையே இக் குற்றத்திற்கு காரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இலங்கை-இந்திய உறவு சீரற்ற நிலையில் இருக்கும் போது இத்தகைய செயல் பாரதூரமானது.

நிருபர் ஆனந்த் ஒரு சாதாரண நிருபர் அல்ல; ஒரு பிரபல தேசிய நிறுவனத்தின் பிரதிநிதி. காரணம் எதுவானாலும் அவருக்கெதிரான நடவடிக்கை தவறானதென்று இந்திய அரசு இலங்கையிலிருந்து இந்தியா புறப்படவிருந்த இந்திய உயர்ஸ்தானிகர் திரு. சத்வாலின் பயணத்தை ரத்துச்செய்தது இந்திய அரசின் ஆத்திரத்தை விளக்குகிறது.

அகில இந்திய பத்திரிகையாளர் சங்கம் கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. இந்திய பாராளுமன்றம் இவ்விடயத்தை விவாதிப்பதானால் விடயம் சீரியஸ் என்பது அர்த்தம்.

நிருபருக்கு நீதிமன்றம் நியாயம் வழங்குமென்பதில் எமக்கு சந்தேகமில்லை. எவர் என்னதான் சொன்னாலும் இலங்கை நீதிமன்றம் சட்டத்துக்கு மதிப்பளிக்கின்றது.

ஆனால் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு இன்றைய அவசரகாலச் (பயங்கரவாத தடை) சட்டம் என்ன அனர்த்தங்களை உண்டுபண்ணுமோ என்ற நடுக்கம் இன்று பத்திரிகையாளருக்குப் பொதுவாகவும் நிருபர்களுக்குச் சிறப்பாகவும் உண்டு.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற பாரதியாரின் பாட்டு இரத்தத்தில் கலந்துவிட்டாலொழிய பத்திரிகா தர்மம் பறந்திடும் அபாயம் உண்டு.

### ஜி. ஸி. ஈ. (சாதாரண) பரீட்சைமுடிவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீளவும் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சை பெறுபேறுகள் ஜூன் மாத நடுப்பகுதியில் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### புனரமைப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலய யாகசாலை, வசந்த மண்டபம், புதிய கொடித் தம்பம் நிறுத்தம் ஆகிய புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகிறது

# இன்று மணிவிழாக்காணும் விஸ்வநாதக்குருக்கள்

வைணவர்கள் ஸ்ரீமந் நாராயணனையே முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். ஸ்ரீமந் நாராயணனே பத்திரிநாத்தில் நரநாராயணன் என்னும் நாமத்திலும், வடமதுரை, பிருந்தாவனம், கோமுலம். துவாரகை ஆகிய இடங்களில் கிருஷ்ணனாகவும் பூரியில் ஜெகந்நாதனாகவும் காஞ்சியில் வரதராஜனாகவும் திருப்பதியில் ஸ்ரீநிவாசனாகவும் பண்டரிபுரத்தில் விட்டவனாகவும் சிதம்பரத்தில் கோவிந்தராஜனாகவும் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதனாகவும் மதுரையில் அழகராகவும் திருவனந்தபுரத்தில் பத்மநாபனாகவும் யாழ்நகர் வண்ணார்பண்ணையில் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள்என்றும் வணங்கப்பெறுகின்றான்.

மூர்த்திதலம் தீர்த்தம் அமைவது போன்று ஒரு ஆலயத்துக்கு குருக்களும் பொருத்தமாக அமைய வேண்டும்.

இத்தவகையில் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலுக்குப் பிரதம குருக்களாக விளங்கும் பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்களால் கோயிலுக்கும் கோயிலால் குருக்களும் பெருமை பெற்றுள்ளன,

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலுக்கும் அரை நூற்றுண்டாகத் தொடர்பிருந்து வருகிறது.

நவாலியில் பிறந்த விஸ்வநாதக் குருக்கள் சிறுவயதிலேயே அவரது மைத்துனர் பிரம்மஸ்ரீ சண்முகக் குருக்கள் இராமசாமிக் குருக்களுடன் வந்து தங்கியிருந்து பள்ளிக்கூடப் படிப்புடன் வேதாகமங்களையும் கற்றுவந்தார். பிரம்மஸ்ரீ இராமசாமிக்குருக்கள் நீண்டகாலமாக வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலின் பிரதம குருக்களாகப் பணியாற்றி வந்தார்.

வேத, ஆகம சாஸ்திரங்களில் நுண்ணறிவு பெற்றுத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ இராமசாமிக் குருக்களிடம் முறைப்படி வேத ஆகமங்களைக் கற்ற பிரம்மஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் கிரியாமுறைகளிலும் மைத்துனரைப் பின்பற்றினார்.

'கோபால்'

1937ம் ஆண்டில் மைத்துனர் பிரம்மஸ்ரீ இராமசாமிக் குருக்களுடன் வந்துசேர்ந்து கல்வியும் வேதஆகம சாஸ்திரங்களையும் கற்ற சாமி விஸ்வநாதக்குருக்கள் மிக இளம் வயதிலேயே திருமணம் செய்து கொண்டு சமயக்கிரியைகள் செய்வதற்குத் தகுதிபெற்றார்.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்களின் கல்விஞானமும் கிரியா முறைகளும் நாட்டின் இதர பகுதிகளுக்கும் எட்டியது. பல்வேறு ஆலயங்களின் வருடாந்த உற்சவங்களுக்கும் கும்பாபிஷேக வைபவங்களுக்கும் சாமி விஸ்வநாதக் குருக்கள் அழைக்கப்பட்டார்.

இலங்கையில் மட்டுமன்றி சிங்கப்பூர், மலேஷியாவிலுள்ள ஆலயங்களுக்கும் சாமி விஸ்வநாதக் குருக்கள் அழைக்கப் பெற்றார். ஆங்கு ஆலய வருடாந்த உற்சவங்களையும் குடமுழுக்கு வைபவங்களையும் நிறைவேற்றி வைத்தார்.

நவாலி அட்டகிரிக் கந்தசாமி கோயிலில் பிரதம குருவாகவும் விளங்கும் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களுக்கு இன்று அறுபது வயது பூர்த்தியாகிறது. மணிவிழாக் காணும் குருக்கள் இன்று அமைதியாகத் தமது இல்லத்தில் நடைபெறும் வைபவத்தில் கலந்து கொள்கிறார்.

"உலகத்தில் ஆன்மகோடிகளாகிய மக்கள் உயிருடன் இருந்து வாழவைப்பது இறைவழிபாடு. இது காணபத்தியம், சைவம், வைஷ்ணவம், கௌமாரம், சாக்தம், சௌரம் என ஆறு பிரிவுகளை உடையது. இதில் மக்கள் தாங்கள் ஒவ்வொருவரும் தமது சிந்தனைக்கேற்ப ஒவ்வொரு மத நூல்களின் வழியே வழிபாட்டை நடத்தி அருள் பெற்று வாழ்கிறார்கள்.

ஆகவே பக்தியின் ஸ்வரூபத்தையும் அது எவ்வகைப்பட்டது என்பதையும் ஆராயுங்கால் பகவானுடைய நாமங்களில் ஏதாவதொன்றைப் பரிசுத்தமாக இருந்து ஜபிப்பதே சிறந்தது என்றும் இதுயாவராலும் சுலபமாகச் செய்யக்கூடியதென்றும் இதனால்தான் நமது வாழ்வு கடைத்தேற முடியும் என்றும் சாஸ்திரங்கள் புகழ்ந்து கூறுகின்றன.

ஒவ்வொருநாளும் காலையில் துயில் எழுந்து நித்தியகர்மானுஷ்டானத்தை முடித்துப் புனிதமான இடத்தில் அமர்ந்து, மனம், வாக்கு, காயம் என்பவற்றை ஒருவழிப்படுத்தி சிவனுடையதோ, விஷ்ணுவினுடையதோ அல்லது தேவியினுடையதோ ஒரு நாமத்தைக் குறைந்தது 108 தரமாவது ஜபிக்க வேண்டும் இது ஆன்மார்த்தநாம சங்கீர்த்தன வழிபாடு ஆகும் என்று பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் ஒரு சிறு கட்டுரையில் கூறியிருப்பது பலருக்கும் பயன் தருவதாகும்.

மணிவிழாக்காணும் குருக்களுக்கு விரைவில் ஒரு விரிவான விழா எடுக்க வேண்டியது பல்வேறு ஆலயபரிபாலனசபைகளின் [illegible]கும்.

# 'பிரச்னைக்கு முகம் கொடுங்கள்' என்ற தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி

இன்று தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தியின் 90 வது பிறந்த தினமாகும். ஆறு வயதுச் சிறுவனான கிருஷ்ணமூர்த்தி 1901 ஆண்டில் ஒரு நாள் மாலை சென்னைக் கடற்கரை மணலில் சிற்றில் கட்டிச் சிதைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய அபாரமான தேஜஸ் அங்கு உலாவிய ஆங்கிலப் பெண்மணி அன்னி பெசன்ற் அம்மையாரின் கவனத்தைக் கவர்ந்து இழுத்தது. அவர் காந்தியடிகளுடைய இந்திய விடுதலை இயக்கத்திற் சேர்ந்து அதற்காக வேண்டிய பணிபுரிய அடிகளாருடன் இங்கிலாந்திலிருந்து இந்தியாவந்த தியாகியாவார்.

அரசியலைவிட இந்திய தத்துவஞானம் அம்மையாரை ஈர்ந்தது. ராம கிருஷ்ணரைப் பேல், கிறிஸ்துவைப்போல், அக்குழந்தையும் அவதார புருஷனாக உலகம் உய்யச் சேவை செய்யக்கூடிய தெய்வீக படைப்புச்சக்தி உடையதென்பதை அம்மையாரின் தீர்க்க தரிசனம் காட்டிற்று. தாயில்லாத அக்குழந்தையைத் தந்தையிடமிருந்து பெற்று தமது சுவீகாரப்பிள்ளையாக ஏற்றுச் சிறப்பாக வளர்த்தார், சிறுவன் கிருஷ்ண மூர்த்திக்கு இங்கிலாந்தில் ஆங்கிலக்கல்வி வழங்கப்பட்டது பட்டப்படிப்பை வேண்டாமென்று உதறித் தள்ளினார். உளவியல் தூண்டுதலாலும் நினைவுமீட்புத்திறமையை வளர்ப்பதாலும் பெறப்படும் கல்வியாலும் பார்க்க அவதான ஆற்றலாலும். விழிப்புணர்வாலும் படைப்பு விவேகசக்தியைச் சுயமாகவே மலரச்செய்யும் கல்வியே சிறந்ததெனச் சிறுவயதிலேயே தெளியப்பெற்றார்.

சுய ஊக்கமும், சுயாற்றலும், சுதந்திரதாகமும், பிறரைப் பின்பற்றாத மேதாவிலாசமும் அவரிடம் இயற்கையாகவே பொலிவுற்றன வேத சாத்திரங்களிஸ் மெய்ப்பொருளை ஓதாமலேயே உணர்ந்தார். கேளாததைக்கேட்டார். காணாததைக்கண்டார் நினைவற நினைந்து வழுவற வாழ்கிறார். 90 வயதிலும் குழந்தை உள்ளம் படைத்த அவர் எந்த மன இந்திரிய நினைவுகளையும் தாவிச் செல்வதில்லை, அவருக்கு வலைவீசத்தெரியாது. சுழியோடப் புரியாது. இப்படியும் ஒரு உத்தம மனிதப்பிறவி உண்டா?

நா. செல்லப்பா

1929ம் ஆண்டு கிருஷ்ணமூர்த்தியை ஓர் அவதார புருஷனாக உலகுக்கு அறிமுகப்படுத்தும் ஏற்பாடு அன்னி பெசன் அம்மையாரால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட மத்திய கேந்திர இடமான சுவிஸ்சலாந்தில் தனியானதொரு வானொலி நிலையம் நிறுவப்பட்டது. அவதார புருஷரின் கன்னி உபதேசச் செய்தியை உலகுக்குப்பரப்பும் நந்நாளும் நியமிக்கப்பட்டது. இதற்தென ஐந்து கோடி டொலர் பணம் வசூலிக்கப்பட்டது. "தாரகா நிறுவனம்" என்னும் ஸ்தாபனமே இவற்றுக்கெல்லாம் பொறுப்பாக இருந்தது.

அப்பொழுதுதான் எவரும் எதிர்பாராத ஒரு சம்பவம் கிருஷ்ணமூர்த்தியினால் திடீரென நிகழ்த்தப்பட்டது. புரட்சிகரமான ஒரு செய்தியை உலகுக்கு விளக்கும் பொருட்டு அவர்தான் ஓர் அவதார புருஷனுமல்ல. தன்னை எவரும் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டியதுமில்லை எனப் புகழ்பெற்ற அறிக்கையை விடுத்தார். அதன் சுருக்கம் இதோ: சத்தியமென்பது பாதையில்லாத பேருலகாகும்- இதை நான் ஆதரிக்கின்றேன். இதை எந்த ஒரு மதமோ, ஸ்தாபனமோ, கோட்டுகளோ, கொள்கைகளோ அமைத்து அடைய வழிகாட்ட இயலாது. பிறரைப் பின்பற்றுவதனால் பூரணமான உண்மை விளக்கம் பெறுதலரிதாகும். நான் தலைவனுமல்ல; என்னை எவரும் பின்பற்ற வேண்டியதுமில்லை மனத்தால் அறிந்தவற்றிலிருந்து விடுதலை பெறுவதானால் மட்டும்மனிதனுக்கு விடிவு உண்டாகும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்"

இவ்வறிக்கையைப் படித்த அம்மையார் அதிர்ந்துபோனார் அவர்கட்டிய மனக்கோட்டை தரைமட்டமாகியது கிருஷ்ணமூர்த்தி இத்துடன் நில்லாது தன்பொருட்டு ஸ்தாபித்த தாரகா நிறுவனத்தைக் கலைத்து, வசூலித்தபணத்தை எல்லாம் திரும்பக்கொடுத்தல் வேண்டும் என அம்மையாரிடம் கேட்டார். அதற்கிணங்க அம்மையாரும் பெந்தன்மையாக நடந்துகொண்டார். கொள்கைவிளக்கம் உண்மை விளக்கமாகாதென்பதை அம்மையார்பின்பு உணர்ந்து கொண்டார். தாய்ப்பாசத்தோடு இறுதிமட்டும் அம்மையார் கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்தார். அதேபோல கிருஷ்ணமூர்த்தியும் கடைசிமட்டும் அம்மையாருடனிருந்து ஆறுதல் கூறி ஆவனசெய்து உதவினார். எனினும்தான் பெற்ற

(6ம் பக்கம் பார்க்க)

# தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மகாநாடு திங்கள் ஆரம்பம்

## இலங்கை கலந்துகொள்ளாதாம்

(திம்பு)

ஏழு தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு வரும் திங்கட்கிழமை பூட்டான் தலைநகர் திம்புவில் ஆரம்பமாகும்.

இம் மாநாட்டுக்கான ஆயத்தங்களை செய்துகொள்வதற்காக இந்நாடுகளின் வெளியுறவு செயலாளர்கள் நேற்று திம்புவில் கூடி ஆராய்ந்தார்கள்.

இம் மாநாட்டில் இந்தியா பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, மாலைதீவுகள் ஆகிய நாடுகள் கலந்துகொள்ள உள்ளன எனவும் திம்புவில் மாநாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு சீர்குலைந்து வருவது பற்றியும், உலக பொருளாதார நிலைமைகள், மற்றும் தெற்காசிய நாடுகளின் பாதக நிலைமைகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

வெளியுறவுச்செயலாளர்கள் கூட்டத்தை அடுத்து வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம் மாநாட்டில் இலங்கை கலந்துகொள்ள மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

# ரஜீவ் விஜயத்தை கோபர்ச்சோ ஆவலுடன் எதிர்பார்க்கிறார்

(மாஸ்கோ)

இந்தியப் பிரதமர் ரஜிவ் காந்தியின் சோவியத் பயணத்தை தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக சோவியத் தலைவர் திரு கோபர் சோவ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் குழுக்களுக்கும், ராஜ்யத் துறையினருக்கும் கிரம்ளினில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தின் போதே இந்திய தூதரக பொறுப்பதிகாரி வி. பி. சிங்கிடம் சோவியத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரஜீவ் காந்தியின் சோவியத் பயணத்தின்போது இரு தரப்பு சர்வதேச மற்றும் பரஸ்பர ஆக்கபூர்வமான விஷயங்கள்பற்றி விவாதிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ரா)

## புதிய அலுவலகம்

(வேலணை)

சுமார் 5 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அலுவலம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. சு. வேலாயுதபிள்ளை திறந்து வைத்தார்.

# இந்தியாவின் வெளியுறவு கொள்கைக்கு செக்கோசிலவாக்கியா பாராட்டு

(புதுடில்லி)

''பிரதமர் திரு. ரஜீவ்காந்தியின் தலைமையில் இந்தியா கடைப்பிடித்துவரும் அமைதியான வெளியுறவு கொள்கைக்கு செக்கோசிலாவாக்கியாவின் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என்று செக்கோசிலாவாக்கிய நாட்டு தூதுவர் டாக்டர் ஜரமிச் நெரால்ட் புதுடில்லியில் தெரிவித்தார்.

தமது நாட்டின் நாற்பதாவது தேசிய தினத்தையொட்டி நேற்று அவர் ஆற்றிய உரையில் ''எதிர்காலத்தில் இந்தியாவுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்த தமது நாடு முயலும் என்றும் இந்த ஆண்டு ஜனவரியில் ஆறு நாடுகளின் தலைவர்கள் நிறைவேற்றிய புதுடில்லி தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்தியாவின் தலைமையிலான அணிசேரா இயக்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கும் முதல் நாடுகளில் செக்கோசிலாவாக்கியாவும் ஒன்று என்றும் அவர் தெரிவித்தார். [ரா]

## பிறேஸில் வெள்ளப்பெருக்கு

[புவனர்ஸ்அயர்ஸ்]

பிறேஸில் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சுமார் பத்து லட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பல ஆண்டுகள் வறட்சிக்குப் பின் கடந்த ஆறுவாரங்களாக தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையின் நிமித்தம் பல நகரங்கள் நீரில் மூழ்கி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை மற்றும் மருந்து வகைகளும் விமானங்கள் மூலம் விரைந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ரா]

## நெடுந்தீவு பிரஜைகள்குழு

(நெடுந்தீவு)

''இன்றைய நிலையில் பிரஜைகள்குழுவின் சேவைமூலம் அதிகம் சாதிக்கமுடியும்''

இவ்வாறு நெடுந்தீவு மாக வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பிரஜைகள் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட அருட்திரு இ. சகாயநாயகம் தெரிவித்தார்

பின்வருவோர் நிர்வாக உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர். இணைச் செயலாளர்கள் அருட்திரு. டி. எஸ் தியாகராசா புலவர். ஏ. டபிள்யு அரியநாயகம் பொருளாளர் திரு. எ. பொன்னுத்துரை பண்டிதர் சு. பசுபதி, திரு. த. அம்பலம்.

## வகுப்புகள் ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)

காரைநகரில் நிகழ்ந்த சம்பவங்களினால் பாதகப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறி சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனை அடுத்து சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் வகுப்புகள் வழமை போல நடைபெறுகின்றன

## பண்ணிசையில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடாத்திய தெய்வீக மகாநாட்டில் செல்வி குலசேகரம் கௌரி திருமுறைப் பண்ணிசைப் போட்டியில் முதலிடம் பெற்றார்.

யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த இவருக்கு நல்லை ஆதீனம் பொற்பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. தொழிலதிபர் க. கனகராசா பொற்ருளம் வழங்கிக் கௌரவித்தார்.

# கசிப்பின் தீமையை விளக்கி துண்டுப்பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

கசிப்பு குடிப்பதனால் ஏற்படும் தீமையை வலியுறுத்தி அதனை முற்றாகவே கைவிடும்படி, கசிப்பு உற்பத்தியாளருக்கும் அதனைக் குடிப்பவர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

''தமிழீழ விடுதலைப் புலிகள்'' அரசியற்குழு 'மனிதாபிமான வேண்டுகோள் கசிப்பைக் கைவிடுங்கள்' என்ற, தலைப்பில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது

அப் பிரசுரத்திலேயே மேற் குறிப்பிட்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது அப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று எம் மக்கள் மத்தியில் கசிப்புக் குடிக்கும் ஒரு கெட்ட பழக்கம் கூடிவருவதை அவதானிக்க முடிகிறது. கசிப்பு என்பது ஒரு குடிவகை அல்ல. உண்மையில் நஞ்சு. மற்றைய குடிவகைகளில் வெறிப்பதற்காக உள்ள பதார்த்தம் எதனேல் எனப்படுவது. ஆனால் கசிப்பில் எதனேலைவிட மெதனேலே அதிகம் உண்டு. மெதனேல் ஒரு நஞ்சு. யாரும் இது பற்றி அறிந்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள் மெதனேல் நஞ்சுதான் என்று சொல்வார்கள். அதாவது நாங்கள் கசிப்பு என்று நஞ்சைக் குடிக்கிறோம். நஞ்சைக் குடித்தால் என்ன நடக்கும்? மனிதன் சாவான்.

மக்களே ஆயுதப்படையினரின் அட்டூழியத்தால் எமது மக்களை இழந்து கொண்டிருக்கும் நாம் இப்படியும் இழப்பதா? இது தற்கொலை செய்வதாகுமல்லவா. தயவு செய்து எமது மக்களே சிந்தியுங்கள். நாம் பலரை அணுகிப் பார்த்தோம். கதைத்துப் பார்த்தோம்; கசிப்புக் குடிப்போர் இப்படிச் சொல்லுகிறார்கள். ''கசிப்பு வடிக்கப்படுவதால் தானே நாங்கள் குடிக்கிறோம்'' கசிப்பு வடிப்போர் இப்படிச் சொல்லுகிறார்கள். ''கசிப்பு குடிப்பதற்கு ஆட்கள் இருப்பதாற்தானே நாங்கள் வடிக்கின்றோம்''. ஆனால் இவை எதுவுமே உண்மையில்லைஎன்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கான அடிப்படைக் காரணி, பொருளாதாரக் காரணிதான். ஆனால் இப்படிச் சொல்லிவிட்டு பொருளாதாரக் காரணி சரிவருமட்டும் நாம் பேசாமலிருந்து விடலாமா? இல்லை. அது வரைக்கும் காத்திருந்தால் எமது மக்களிற் பலர் அதற்கிடையில் அழிந்து விடுவார்களே! இந்த அழிவை நாம் அனுமதிக்கலாமா? கூடாது. ஒருபோதும் கூடாது. எனவே தமிழ் மக்களே சிந்தியுங்கள்;

கசிப்பு குடிக்கும் தமிழ் மகனே சிந்தி! நீயும் தமிழ் தமிழ்மகன் தான். ஆனால் என்ன செய்கிறாய், கசிப்பு என்ற பெயரில் இன்னொரு தமிழ் மகனுக்கு நீ நஞ்சு கொடுக்கிறாய் இது சரியா? இன்னொருவனை சாகவைத்துத் தானா நீ வருமானத்தைத் தேட வேண்டும்.

சீ......நாயும் பிழைக்குமே இந்தப் பிழைப்பு.

போராடும் தமிழ் மக்களே தயவசெய்து சிந்தியுங்கள். அரசு இன்று பல வழிகளில் தமிழ் மக்களை அழிக்க முயல்கின்றது. ஆனால்அதற்குநாமே உதவிசெய்து எம்மைநாமே அழித்துக் கொள்கிறோம் எமது விடுதலையைநாமே பின்தள்ளி விடுகிறோம். இது சரியா? இது ஏற்கக்கூடியதுதானா? இல்லை. ஒருபோதும் இல்லை. ஆகையால் தமிழ் மக்களே ஒன்றுபடுங்கள். கசிப்பு ஒரு நஞ்சு என்ன்பதை அனைவருக்கும் சொல்லுங்கள். திருப்பி, திருப் சொல்லுங்கள்; இந்த நஞ்சு குடிக்கும் பழக்கததை முற்றாக நிறுத்துவோம். எமது விடுதலைப் போராட்டத்தில் முயற்சியுடன் முன்செல்வோம். (மா)


★ நில்லுங்கள்

★ கவனியுங்கள்

★ புறப்படுங்கள்

தாமதமின்றி

லண்டன் — பேர்லின்

செல்வதற்கு

உடன் தொடர்பு கொள்ளவும்



AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற்

99-2/56 B, கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு - 1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரிவீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம். போன்; 22689

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்




நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்

2 ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ. இல-9
(முன்னுள் மருதானைறேட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965—9

Metropolitan

# நேர்முக உரையாடல்; ஆணையாளர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் சகல இறைவரிப்பகுதிகளும் கணக்குப்பகுதி சுகாதார பகுதிமற்றும் கட்டடதிட்டமிடல் பகுதியும் சிறும்பியடியிலுள்ள மாநகராட்சி மன்றத்தின் புதிய அலுவலகத்திலேயே இயங்கிவருகிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ரொக்கமாகவும் காசோலை மூலமாகவும் சகல கொடுப்பனவுகளையும் வரியிறுப்பாளர் சிறும்பியடியிலுள்ள அலுவலகத்தில் நிறைவேற்றிக்கொள்ளலாம் மேற்காணும் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கான தொலைபேசி இலக்கங்கள் வருமாறு:- 22273, 22274.

மாநகரசபையுடனான தமது அலுவல்களின் நிமிர்த்தம் மாநகர ஆணையாளருடன் நேர்முக உரையாடல்களை நடத்த விரும்புவோர், இதே கட்டடத்திலுள்ள மா கர ஆணையாளரது அலுவலகத்தில் வேலை நாட்களில் முற்பகல் 10-00 மணிக்கும் 11-30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தமது சந்திப்புக்களை வைத்துக்கொள்ளலாம் எனத்தயவாக அறியத்தருகிறோம்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் ஏனைய சில அலுவலகங்களான மராமத்துப் பகுதி, மின்சாரப் பொறியியலாளர் அலுவலகம், நீர்வேலைப்பகுதி, வேலைத்தலம், பொது மற்றும் மின்சாரக்களஞ்சியங்கள் ஆகியன தற்போதைக்கு யாழ் நகரமண்டபத்தின் கிழக்குப்பக்கமாகவுள்ள பழைய கட்டிடத்திலேயே தொடர்ந்தும் இயங்கிவரும்.

மாநகர அலுவல்கள் தொடர்பான சகல கடிதங்களும் ''மாநகர ஆணையாளர், மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்பப்படுதல் வேண்டும்.

மாநகராட்சி மன்றத்துடனான தமது அலுவல்களை நிறைவேற்றுவதில் யாழ்ப்பாண மாநகர பொதுமக்களுக்கும், வரியிறுப்பாளர்களுக்கும் உதவும் பொருட்டு அவர்களது நலன்கருதி இத்தகவல்களை அறியத்தருகிறோம்.

# இன்றைய பலன்

மாதம்-சித்திரை
திகதி-29 (1985-5-11)
வாரம்-சனி
திதி-ஸப்தமி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்-திருவோணம் முன் இரவு வரை

மேடம்: வாகனச்சொந்தக்காரர்களுக்கு வரவிலும் திருப்தி குன்றும், சாரதிகளாயின் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

இடபம்: கற்றதனால் பலன் கைமேல் கிடைக்கும், கல்வியிலீடுபடுவோர் போற்றப்படுவா, வித்தையிலும் திருப்தி உண்டு.

மிதுனம்: பாதையில் பழுதுண்டு, பகைவர்கள் காத்திருப்பர், பார்த்து நடக்கவும், விண் குறைகேட்கவும் நேரலாம்.

கடகம்: வாழ்வில் வளம் நன்றும், வரவிலும் மந்தம் காட்டும், வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரும்.

சிங்கம்: இக்கட்டான தினம், இன்று பெரும்பாலும் நஷ்டத்தையே தரும், இன்று கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்க்கவும்.

கன்னி; அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும், தசகசமயத்தில் பெரியவர் ஒருவரின் உதவி கிடைக்கும்.

துலாம்: தொழில்தனில் தொல்லை தோன்றும், வருவாயும் பாதிக்கப்படும், தொடர்பிடும் வினையாலே மனதில் சஞ்சலம் தோன்றும்.

விருச்சிகம்: தேகநிலையில் திருப்திக்குறைவுடன் புதிரரால் கவலையும் உண்டு, மனத்திடம்வேண்டும் மகிழ்ச்சியான செய்தியும் உண்டு.

தனுசு: பொது விவகாரங்களில் ஈடுபடுவதால் சிரமப்படுவீர்கள், சிலரின் ஏமாற்றத்துக்கும் ஆளாகநேரலாம்.

மகரம்: உடல் நிலையில் சுறுசுப்புக்குன்றும், பயனுள்ள விடயம் குறித்து திட்டமிடப்படலாம். விடாமுயற்சி நன்று.

கும்பம்; நீண்ட நாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்கநேரும், எதிர்பார்க்கும் வரவில் தடையேற்படும்.

மீனம்: மனதில் கவலையும் சகோதர வழியால் சஞ்சலமும் உண்டு. திடீர்த்தாககுதல் திகைக்கவைக்கும்

திருமலை
வே. ரவீந்திரன்

# ஜனாதிபதிக்கு ஆலால் தந்தி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து பூரண விசாரணை நடத்த வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளரும் முன்னாள் கோப்பாய்த் தொகுதி எம். பியுமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அவசரத் தந்தியில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''நேற்று முன் தினம் 9ம் திகதி வியாழக்கிழமை பொலிகண்டி, ஊறணி- வல்வெட்டி நவிண்டில் ஆகிய இடங்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 75 பொதுமக்கள் மட்டில் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிள்ளது அத்தோடு வல்வெட்டித்துறையில் உள்ள பல வீடுகளில் பெறுமதிமிக்க நகை, பணம், மின்கருவிகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் பற்றி பூரண விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்,'' (மா)

## யாழ்தேவி —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும். பின்னர் 2-15 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இரவு 10-30 மணிக்கு அது கொழும்புக்குப் போய்ச்சேரும்.

## இந்தியாவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு மாஜிஸ்திரேட்டினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்

''இலங்கை அரசின் இந்த நடவடிக்கை இந்தியாவை மேலும் ஆத்திரமடையச்செய்யும் அத்துடன் இருநாட்டு உறவுகளையும். மேலும் மோசமாக்கும். இலங்கை-இந்திய உறவிலுள்ள வித்தியாசமான போக்குகளை நீக்கவேண்டும்

''இந்திய இணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கான் அளவுக்கு அதிகமாக எதனையும் கூறவில்லை. எமது ஜனாதிபதி கூட பாகிஸ்தானில் ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாகப் பேசியுள்ளார் எனவே இந்தியாவைப் போருக்கு அறைகூவும் உரையினால் எவ்வித பயனுமில்லை இலங்கையின் ஒருகோடி 50லட்சம் மக்களும் சுதந்திரத்துடன் ஒற்றுமையாக வாழ வழியமைக்க வேண்டும்.'' என்றார்.

### பிரதமர் கருத்து

இவ்விவாதத்தில் பிரதமர் திரு ஆர். பிரேமதாஸா பேசுகையில் ''இலங்கையில் வன்முறைசளற்ற சூழ்நிலையை இந்தியாவினால்தான் ஏற்படுத்தமுடியும்'' என்றார்

''ஒரே நாளில் ஒரே நேரத்தில் வன்முறைகள் கைவிடப்பட்டால் பயங்கரவாதிகள் அனைவருக்கும் பொதுமன்னிப்பளிக்கப்படும் இதனை ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார்'' என்று கூறிய பிரதமர்,

''நடந்தவையெல்லாம் நடந்தவையாகட்டும் எதிர்காலத்தில் ஒரு சுமுக நிலையை ஏற்படுத்துவோம். இந்திய ராஜதந்திரி திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கை வந்திருந்தபோது அவர இலங்கை விவகாரம் தொடர்பாக தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது ஆனால் இந்தியா திரும்பியதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.'' என்று தெரிவித்தார்.

## ஆஸ்ரேலியாவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. வில்லியம் ஜோர்ஜ் ஹெய்டன் புதுடில்லியில் வெளியிட்ட கருத்து குறித்து கடுவெல எம். பி. போல் பெரேரா ஆட்சேபம் தெரிவித்தார்.

''1955-ம் ஆண்டில் ஆஸ்திரேலியா அரசு இனவெறி கொண்டிருந்தது. அப்படியான ஒரு நாடு இலங்கைபற்றி எப்படி விமர்சிக்கமுடியும்?'' என்று திரு. போல் பெரேரா கூறியபோது திரு. சரத் குறுக்கிட்டு ''இந்தியாவுடன்போல ஆஸ்திரேலியாவையும் பகைத்து இரட்டிப்புப் பகைமையை இலங்கை சம்பாதிக்கக் கூடாது ஆஸ்திரேலிய அமைச்சர் ஒரு அரச விருந்தாளி என்றும் கூறினார்.


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர்கோவில் ஒழுங்கை, இல:20/6ஐச் சேர்ந்த பகீரதன் அமிர்தகௌரியின் மரணசாதனமற்ற மரணச் சொத்து சம்பந்தப்பட்ட விடயம்.

— காலஞ்சென்றவர்.

அத்துடன்

சிவில் நடைமுறைக் கோவை (அத். 101) இன் 530வது இலக்கப் பிரிவின் கீழ் செயற்படும் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட விடயம்.

யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர் கோவில் ஒழுங்கை இலக்கம் 20/6ஐச் சேர்ந்த சின்னத்தம்பி பகீரதன்.

— மனுதாரர்

வழ. இல: தத்துவம்/3867. எதிர்

1. யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த பகீரதன் கௌக்ஷின்.

இவர் பரடையாயமாத வராகையால் அவரின் வழக்குப் பாதுகாவலராகிய 2ம் எதிர்வாதி மூலம் தோற்றுகிறார்.

2. யாழ்ப்பாணம் கொட்டடி, வைரவர் கோவில் ஒழுங்கை, இல 20/6ஐச் சேர்ந்த அரியரத்தினம் துஷ்யேந்திரா.

— எதிர்வாதிகள்.

மேற்குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேற்குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்செத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது

மேற்கூறிய எதிர்மனுதார்களோ அன்றி அக்கறையுள்ள வேறு எவருமோ 1985ம் ஆண்டு பங்குனி மாதம் 1ம் திகதி காலை 9-00 மணிக்கு முன் இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படக்கூடாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1985ம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி

1-3-85 காரணம் காட்டும் திகதி 17-5-85ற்கு நீடிக்கப்பட்டுள்ளது

நீதிமன்றக் கட்டளைப்படி

கு குலசிங்கம்.
பதிவாளர்

வரைவு:
கே பாக்கியலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
3137



லதா மினி
(கோண்டாவில்)
தினசரி 10-30, 2-00, 4-00
I SPIT ON YOUR GRAVE
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

முருகன் மினி
(இருபாலைச்சந்தி)
தினசரி 10-30, 2-00, 4-30
9 முதல் 10 வரை
கொலுசு
11 முதல் 12 வரை
சுமது என் சுந்தரி.

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30 2 00
கமலஹாசன்- ஜெயபிரதா மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின் மிகச்சிறந்த படம்

றீகல்
தினசரி 10-30. 2-00
பாண்டியன் ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்
றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

லிடோ சினிமா
''You dont Assign; You Unleash Him''
Staring
Kenwahl-Alberta Watson
in
''THE SOLDIER''

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
ரஜனிகாந்த் - மாதவி நடித்த
தில்லு முல்லு
(ஈஸ்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00 4-15
Burt Reynolds
in
BEST FRIENDS
காதலர் இருவர் வாழ்க்கை மர்மத்தைச் சித்தரிக்கும் ஓவியம்.

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
7 — 9
ரஜனி, ராதா, பாலாஜி, ஜெய்சங்கர் நடித்த
இரும்புக் கை

மொடேர்ண் மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்]
10-5-85 முதல்
DRUNKAN MASTER
நகைச்சுவை நிரம்பிய கராட்டி சண்டைப்படம்
பாலர் முதல் பெரியோர் வரை கலகலப்பாக
புத்தம்புதிய படப் பிரதியில்
பார்த்து மகிழலாம்.
தினசரி 3 காட்சிகள்

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-30,
ரஜனிகாந், ராதா, V. K. ராமசாமி நடித்த
நான் மகான் அல்ல
(கலர்)
5'X5' திரையில்

ஆனந்தி வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம் ஜி ஆர்-சரோஜாதேவி, வசந்தி, எம் ஆர் ராதா
மாடப்புறு

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப. 10-30 பி. ப. 2-00
பாண்டியன் (இருவேடங்களில்) நளினி நடித்த
நிச்சயம்
12-5-85 முதல்
காவல்காரன்
4-30 P. M.
EAGLE ATTACK AT TOWN

# கொக்குவிலில் சுடப்பட்ட குடும்பஸ்தர்பற்றி எதுவித தகவலுமில்லை!

[யாழ்ப்பாணம்]

கடந்த புதன்கிழமை மாலை கொக்குவில் கிழக்கு கோவில் வீதியில்வைத்துச் சுடப்பட்ட இளம் குடும்பஸ்தரான ஞானசுந்தரம் ஜகத்குமார் [வயது 26] குறித்து இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

சம்பவதினம் மாலை சுமார் 4 மணியளவில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது இவர் சுடப்பட்டார். சுமார் ஐந்து அல்லது ஆறு வேட்டுக்கள் அப்போது தீர்க்கப்பட்டன. இதனையடுத்து அவ்விளைஞரைச் சுட்டவர்கள் தாம் வந்த வாகனங்களில் ஒன்றிலே அவரைத் தூக்கிப்போட்டு எடுத்துச்சென்றதாகவும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அவரது உறவினர்கள் யாழ் பிரஜைகள் குழுச்செயலாளர் மற்றும் அரசாங்க செயலக உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் எதுவிதபயனும் கிடைக்கவில்லை.

குருநகர், பலாலி இராணுவ முகாம்களில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது. ஆனால் இச்சம்பவம் குறித்து எதுவும் தெரியாதென அவற்றிலிருந்துபதில் கிடைத்துள்ளதாம். யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் தொடர்புகொண்ட போதும் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

சுடப்பட்ட ஜகத்குமார் ஒரு பெண்குழந்தைக்கு தந்தையென்றும், அவரது மனைவி தற்போது கர்ப்பிணியாகவுள்ளார் என்றும் கூறப்பட்டது.

## முன்னாள்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பரி ஹேபர்ட் வீரசிங்க நேற்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின்மகாநாடொன்றை கூட்டினார். அம்மகாநாட்டில் நாட்டின் தற்போதைய பொலிஸ் நடவடிக்கைகள் ஆராயப்பட்டன.

## பிரச்னைக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியதரிசனத்துக்கு முரணாக நடந்தாரில்லை

பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உரியவழி அவற்றுக்கு முகங்கொடுத்து விழிப்புணர்வுடன் சமநிலையில் விசாரணைசெய்து அவற்றின்மூலவேரை முழுமையாகத் தெளிந்து நீக்குதலேயாகும் என்பது கிருஷ்ணயின் விளக்கமாகும் இதன் பிரகாரம் இன்று இலங்கையில் ஏற்பட்டு வளரும் இனப்பிரச்னையை முழுமையாகத் தீர்க்க வேண்டுமாயின் அதற்கு முகங்கொடுத்து விசாரணைசெய்து உண்மைவிளக்கம் பெறாது மனித உரிமைமீறலை மன அயர்வுப் புலத்தில் மறைத்துவைத்துக் கொண்டு, தலைவர்களும் பொதுமக்களும், அதிலிருந்து விலகி ஓடுதலும் flight முப்படையினரைக் கொண்டு அதை அடக்கி அழிக்கச்செய்தலும் fight உண்மையான தீர்வாகாது கிருஷ்ணமூர்த்தியின் போதனைகள் பௌத்தருடைய தருமத்தைத் தழுவியதெனக் கூறும் பௌத்ததலைவர்கள் இதற்குநடுவு நிலையிலிருந்து செவிசாய்ப்பார்களா? அவருடைய பிறந்ததினத்தில் அவருக்குப்பல்லாண்டு கூறி, ஆசீர்வதித்தல் எமது அன்புக்கடமையாகும்

## யாழ். நகரில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரிப்பு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும், நவீன சந்தை ஜவுளி நிலையங்களும் மற்றும் கே. கே. எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, பஸ் நிலையப் பகுதி, மற்றும் இடங்களிலுள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

ஒரு சில கடைகள் நேற்றுக் காலை ஒற்றைக்கதவில் திறக்கப்பட்டிருந்தபோதிலும், நண்பகலுடன் அந்தக் கடைகளும் பூட்டப்பட்டன. கடைகள் ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டிருந்தபோதிலும் வியாபாரம் எதுவும் நடைபெறவில்லை. மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

நேற்றுக் கடைகள் பூட்டப்பட்டதால், நூற்றுக்கு மேற்பட்ட வகுப்புத் தொழிலாளர் வேலையின்றி கஷ்டப்பட்டனர். நாளாந்த வருமானத்தில் சீவியம் நடத்தும் இவர்கள், குடும்பங்களைக் காப்பாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நகரின் பல்வேறு பகுதிகளில் சிறு கடைகள் வைத்திருக்கும் சில்லறை வியாபாரிகள் நேற்றுப் பொருட்களைக் கொள்முதல் செய்யவில்லை. இதனால் சில்லறைக் கடைகளில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சில பொருட்களின் விலைகளும் அதிகரித்தது. (ஈ)

# இளைஞர் கொடிதினம்

(வண்ணார்பண்ணை)

இந்து இளைஞர் கொடி தினத்தை இம்மாதம் 15ம் திகதி நடத்த யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

இத்தினத்தை முன்னிட்டு மன்றங்கள், பாடசாலைகள் தோறும் கொடி விற்பனையை அமைதியாக நடத்தியும் 15ந் திகதி நல்லூரில் இத்தினத்தையொட்டிய நிகழ்ச்சிகளை இந்து சமய நிறுவனங்களின் முக்கியஸ்தர்களுடன் நடத்தவும் இப்பேரவை ஏற்பாடுசெய்து வருகிறது.

## சமரசப் பேச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு சிவசிதம்பரம் மேலும் கூறியிருப்பதாவது: திரு. கிருஷ்ன் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் இனப்பிரச்னைத் தீர்வு குறித்து பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை என்பதைக்காட்டுகிறது. சமரசப் பேச்சுக்கான சாத்தியமும் தற்போது இல்லை. எதிர்காலத்தில் சமரசப் பேச்சுக்கள் எதுவும் நடைபெறுமானால் அதில் தமிழ்த்தீவிரவாதப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளச் சந்தர்ப்பமளிக்க வேண்டும்'' என்றார்.

## மாடும் மனிதனும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவரது வண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடுகள் மட்டும் எஜமானைவிட்டு வழக்கமான பாதை வழியாக வீடு சென்றடைந்ததாகவும், வீட்டார் வயாதிபரைக் காணாது வண்டி ஆசனத்தைப் பார்த்தபோது அதில் இரத்தக்கறையைக் கண்டு பின்னர் அவர் இறந்துவிட்டதை அறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## வல்வை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ள வீடுகளிலிருந்துசுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன என்றும், சுமார் 15 வீடுகள் எரிக்கப்பட்டும், குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டுமுள்ளன என்றும் வேலிகளும் தீ வைத்து எரிக்கப்பட்டன என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

''நேற்று முன்தினம் 9-ம் திகதி காலை 7-30 மணியளவில் பலத்த குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து மேலும் வீடுகள் தோறும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

''40 பேர் கொல்லப்பட்டதாகவும், வீடுகளில் இருந்து முதல் கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்ட 12 இளைஞர்கள் ஊறணியில் தீர்த்தமாடும் கேணிக் கட்டிட இடிபாடுகளுக்குள் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் அவர்களுள் வாய்பேச முடியாத இளைஞரும் அடங்கும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஊரணியிலுள்ள மீனவ குடியேற்றத்திலுள்ளவாசிகசாலைக் கட்டிட இடிபாடுகளுக்குள் இருந்தும் 25 இளைஞர்களின் சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் 25 இளைஞர்களைக் காணவில்லை என்றும் அவர்களுக்கு என்ன நடந்ததுஎன்று தெரியவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

''குறிப்பாக சில வீடுகளில் குடும்பமே அழிக்கப்பட்டது. கிராமத்தில் பல பெண்கள் இம்சைப்படுத்தப்பட்டனர்'' என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்ளது.

இம்மகஜரின்பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ஆகியோருக்கும் வல்வை பிரஜைகள் குழு அனுப்பி வைத்துள்ளது. (மா)

# இப்படியும் நடக்கிறது

ஸ்ரீமான் பொதுஜனத்திடமிருந்து, நேற்றுப் பகல் தொலைபேசி அழைப்பொன்று வந்தது.

தொலைக்காட்சியைப் போன்றதல்ல தொலைபேசி. ஆனாலும், ஸ்ரீமான் பொதுஜனத்தின் குரலில் காணப்பட்ட கரகரப்பு, அவரின் அகத்தையும் முகத்தையும் அப்படியே படம்பிடித்துக் காட்டியது!

அவர் கூறிய 'செய்திக்கதை'யில் அவர் கிளப்பிய புதிர் :

''......... வல்வெட்டித்துறைக்கும் பங்களாதேஷுக்கும் இப்பொழுது ஏதாவது தொடர்பு இருக்கிறதா?''

எனக்கு சற்றுத் தலை சுற்றியது. புதிர் உங்களுக்குப் புரிகிறதா?

—ஊடுருவி

## மன்னார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தெரியவருகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் உரிமைகோருகிறது

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலை தாமே மேற்கொண்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளது.

கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்; சிலர் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் ஏராளமான துப்பாக்கிகள், பெருந்தொகையான கைக்குண்டுகள், வெடி மருந்துகள், துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸ் நிலையத்திலிருந்துசகலபொருட்களும் கைப்பற்றப்பட்ட பின், பொலிஸ் நிலைய காரியாலயம், பொலிஸ் உப அதிபர் காரியாலயம் அவரது விடுதி, பொலிஸ் விடுதி, கொமாண்டோக்கள் விடுதி, கொமாண்டோக்கள் புதிய காரியாலயம், கொமாண்டோக்கள் வாடி வீடு ஆகிய அனைத்துக் கட்டிடங்களும் முற்றாகத் தகர்க்கப்பட்டனஎன்றும் பொலிஸ் ஜீப் வண்டிகள், பவுசர் வேறுவாகனங்கள் நிர்மூலமாக்கப்பட்டன என்றும் தமிழீழவிடுதலைப்புலிகள் தமதுஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பி- டி- ஐ- நிருபர்-----

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லாமல் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாதெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகையாளரின் விஸா அடுத்தாண்டு மார்ச் மாதம் வரை செல்லுபடியாகுமெனவும் பாஸ்போர்ட் இந்திய ஸ்தானிகராலத்திலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பிணையில் விடப்பட்டுள்ள இவரின் பாதுகாப்புக்கு இந்திய ஸ்தானிகராலயம் பொறுப்பாக இருக்குமென்றும் கூறப்பட்டது.

கிருஷ்ன் ஆனந்த் மீதானமேல் விசாரணைகள் எதிர்வரும் 24-ந் திகதி ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உப-ஜனாதிபதி....

[1-ம பக்கத் தொடர்ச்சி]

திரு ஆர். வெங்கட்ராமன் மத்திய அரசு கிருஷ்ன் ஆனந்தின் கைது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்

லோக்சபா உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்தனர். இக்கண்டனங்களை ஏற்றுக் கவலை தெரிவித்தசபாநாயகர்திரு பல்ராம் ஜாக்கர் இச்சம்பவம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் விளக்கத்தைத் தாம்கோருவதாகவும் பதிலளித்தார்.


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் குமாரகுலசிங்கம்

இளைப்பாறிய P W D ஓவசியரும், அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரருமான பொன்னம்பலம் குமாரகுலசிங்கம் 10-5-1985ல் காலமானார் இவர் காலஞ்சென்ற அன்னசௌந்தரி அம்மாளின் அன்புக்கணவரும். பொன்னம்பலம், செல்லையா, அரியரட்ணம், திருமதி இராசையா, திருமதி சதாசிவம், திருமதி தம்பையா ஆகியோரின் சகோதரரும், நாகேஸ்வரி பாலேந்திரன், கருணைவேல், தியாகேஸ்வரி, இராஜசுந்தரம், வரதேஸ்வரி, இராஜேந்திரன், புனிதவேல், ஞானேஸ்வரி குமரேஸ்வரராஜா ஆகியோரின் தகப்பனாரும், பாலேந்திரன், இராஜசுந்தரம், இராஜேந்திரன், குமரேஸ்வரராஜா, அம்பிகாதேவி, சந்திரவதனி ஆகியோரின் மாமனாரும், இந்திரமாலா, தேவராஜன், ரஞ்சிற்குமார், ராதிகா, ரஜனி, சாந்திகீதா, ரஜீதா, வனிதா, கௌரி, செந்தூரன், கவிதா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சனிக்கிழமை 11-05-1985 அன்று மாலை மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து தச்சிதானந்தகுளம் புதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இவ்வறிவித்தலை அறியத்தருகிறோம்.

'ஞான இல்லம்', வைரவர் புளியங்குளம், வவுனியா.

3219



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லையா

உடுவில் யாமாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோப்பாய் தெற்கு, இருபாலை V. H லேனைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா 9-5-85 ல் காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், தில்லைநாதன், கணேசம்மா, கதிர்காமநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, யோகேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் மாமனாரும், தங்கம்மா, சரஸ்வதி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார் ஈமக்கிரியைகள் இருபாலையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நண்பர்களும், உறவினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

3220



## மரண அறிவித்தல்

கருகம்பனை

### வேலாயுதம் கதிரவேல்

அரச மரக்கூட்டுத்தாபனச்சாலை (தாவடி) அதிபர் கதிரவேல் காலமானார். இவர் தவமணியின் அன்புக் கணவரும் வேலழகன் (பரி யோவான் கல்லூரி), வாகினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையுமாவார்.

தகனக்கிரியைகள் செம்மணி மயானத்தில் 1985-05-11 சனிக்கிழமை மு. ப. 10.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்: இ. சங்கர், (பங்காளர்-செட்டியார் அச்சகம் யாழ்ப்பாணம்)

246, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

3226


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126